செய்தி வெளியீடு எண்:725 நாள்:15.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குளை எய்து மற்றும் மனித வனவிலங்கு மோதல்களை குறைக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், வன பாதுகாப்பு, வன பரப்பை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களின் பொதுவான பிரச்சனைகளுக்கு சட்டத்திற்குட்பட்டு சுமூகமான தீர்வு கண்டு வனத்துறையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான உயர்மட்ட ஆய்வுக் கூட்டம் 15.09.2021 அன்று முற்பகல் 11.00 மணியளவில், சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், மனித-வனவிலங்கு மோதல்கள் மற்றும் அதனை குறைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், யானை, மான்கள், மயில்கள், காட்டுப் பன்றிகள், குரங்குகள், காட்டெருமைகள் போன்ற வன விலங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவற்றை தடுக்க எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றிற்காக மாவட்ட வாரியாக மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வன அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், வன குழு பிரதிநிதிகள், விவசாய சங்க பிரதிநிதிகளுடன் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய கேட்டுக் கொண்டார்.

**மேலும், வன சாலைகளை சீரமைத்தல், வனத்திற்குள் வன விலங்குகளுக்கு தேவையான உணவு மற்றும் நீரை உறுதி செய்தல், சதுப்பு நில பாதுகாப்பு, நிதி ஆதாரங்களை மேம்படுத்துதல் போன்ற முக்கிய பொருள்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., முதன்மை தலைமை வன பாதுகாவலர் திரு. அசோக் உப்ரெட்டி, இ.வ.ப., கூடுதல் தலைமை வன பாதுகாவலர்கள் திரு. பரூவா மற்றும் திரு. நாகநாதன், சிறப்பு செயலர் திரு. ராஜ்குமார் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டார்கள்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9